அரச நிதிச் சுற்றுநிருப இல. PF/429

எனது இல. PUB/FIN/T/02/10
அரச நிதித் திணைக்களம்
பொதுத் திறைசேரி
கொழும்பு-01
2008.03.17

சகல அமைச்சுச் செயலாளர்கள்
திணைக்களத் தலைவர்கள்
மாகாண சபைகளின் பிரதம செயலாளர்கள்
அரச கூட்டுத்தாபனங்கள்/நியதிச் சட்டமுறைச் சபைகள்/
அரசாங்க உடைமைக் கம்பனிகளின் தலைவர்கள் மற்றும்
உள்ளூராட்சி நிறுவனங்களின் தலைவர்கள்

## தேசிய கொள்வனவு முகவர் நிறுவனத்தை மூடி விடல் மற்றும் கொள்வனவு நடவடிக்கைகள் அரச நிதித் திணைக்களத்துக்குக் கையளிக்கப்படல்

அரசியலமைப்புச் சட்டத்தின் 33 ஆம் இலக்க உறுப்புரையின் கீழ் 2004.07.08 ஆம் திகதி வெளியிடப்பட்ட ஜனாதிபதியின் கட்டளையின் பிரகாரம் தாபிக்கப்பட்டு 2004 ஜூலை மாதம் தொடக்கம் செயற்பட்ட தேசிய கொள்வனவு முகவர் நிறுவனம் அதற்குக் கையளிக்கப்பட்ட கடமைகளைப் பூர்த்தி செய்துள்ளதனால் 2008 மார்ச் 01 ஆம் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படும் விதத்தில் அந்த நிறுவனத்தை மூடிவிடவும், அந்த நிறுவனத்தினால் இதுவரை நிறைவேற்றப்பட்ட நடவடிக்கைகள் முன்னர் போன்று அரச பொது நிதி முகாமைத்துவத்துக்குப் பொறுப்பான அமைச்சாகிய நிதி, திட்டமிடல் அமைச்சின் அரச நிதித் திணைக்களத்திடம் கையளிக்கப்படவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தேசிய கொள்வனவு முகவர் நிறுவனத்தினால் செய்யப்பட வேண்டும் என விதிக்கப்பட்டுள்ள மற்றும் தொடர்ச்சியாகச் செய்யப்பட வேண்டியுள்ள சகல நடவடிக்கைகளும் 2008 மார்ச் 01 ஆம் திகதி தொடக்கம் அரச நிதிப் பணிப்பாளர் நாயகத்தினால் நிறைவேற்றப்படும்.

தேசிய கொள்வனவு முகவர் நிறுவனத்தினால் நிறைவேற்றப்பட்ட விடயங்கள் மற்றும் அவற்றுக்கு உரித்துடையதாக தொடர்ந்து செய்யப்பட வேண்டிய நடவடிக்கைகள் போன்றே தேசிய கொள்வனவு முகவர் நிறுவனத்தினால் வெளியிடப்பட்ட இலங்கை சனநாயக சோசலிச் குடியரசின் தேசிய கொள்வனவு வழிகாட்டல்கள் மற்றும் குறைநிரப்பு சுற்றறிக்கை அறிவுறுத்தல்களின் பிரகாரம் தேசிய கொள்வனவு முகவர் நிறுவனத்தினால் நிறைவேற்றப்பட வேண்டிய நடவடிக்கைகளுக்கு அரச நிதிப் பணிப்பாளர் நாயகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்படுவதுடன், உரித்துடைய ஆவணங்கள் அரச நிதித் திணைக்களத்தின் பின்வரும் முகவரியில் தாபிக்கப்பட்டுள்ள கொள்வனவுப் பிரிவுடன் தொடர்பு கொள்ளுமாறும் அன்புடன் அறியத் தருகின்றேன்.

அரச நிதித் திணைக்களம்,
கொள்வனவுப் பிரிவு,
22 ஆம் மாடி, மேற்குத் தூண்,
உலக வர்த்தக மையம்,
கொழும்பு-01.

அந்த அலுவலகத்தின் தொலைபேசி இல. 011-2346385-8 மற்றும் பெக்ஸ் இல. 011-2346383-4 ஆகும்.

கொள்வனவு வழிகாட்டல்கள் பற்றிய விபரம் info@npa.gov.lk இலத்திரனியல் அஞ்சல் முகவரி மூலம் மற்றும் www.npa.gov.lk வெப் தளத்திலிருந்தும் பெற்றுக்கொள்ள முடியும்.

ஒப்பம்: பீ.பி. ஜயசுந்தர
திறைசேரிச் செயலாளர்

பிரதி:
1. ஜனாதிபதி செயலாளர்
2. கணக்காய்வாளர் தலைமை அதிபதி